1973 நவம்பர் 24]

விதமான வாழ்க்கையை அனுபவித்தார்களோ, அந்த அளவுக்கு சிறைகளிலே வசதி செய்து கொடுக்கவேண்டியிருக்கிறது. அதை குறைக்க முடியாது. ஆனால் வழக்குகளின் தன்மையைப்பொறுத்து, குற்றத்திற்கு தக்கபடி அவர்களுக்கு இந்த வகுப்புகளை மாற்றிக் கொடுக்கலாமா என்பதைப் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறோம். அண்மையில் நடைபெற்ற ஒரு மாநாட்டிலும் குற்றத்திற்குத் தக்கபடி மாற்றலாம் என்ற யோசனை தெரிவிக்கப்பட்டது. அது பரிசிலனை செய்யப்படுகிறது.

Training for Extension Staff in Agriculture Department.

* 376. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to intensify the training given to the Extension Staff of the Agricultural Department; and

(*b*) if so, the details thereof?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) குடுமியாமலை அண்ணா பண்ணையில் ஓர் ஆண்டுக்கு ரூ. 3.48 லட்சத்தில் வேளாண்மைப் பயிற்சி நிறுவனம் ஒன்று ஏற்படுத்துவதுபற்றி வேளாண்மை இயக்குநர் அனுப்பியுள்ள செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. என். டென்னிஸ்: இது எப்போது நடைமுறைக்கு வரும்? எத்தனை மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அங்கே ஏற்கனவே ஒரு பள்ளி இருக்கிறது, மேற்கொண்டு எவ்வளவு செய்யவேண்டும் என்பதுதான் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அதுபற்றி எதுவும் இன்னும் முடிவாகவில்லை.